**<u>மணப்பாறை நகராட்சி</u>**

**2019- ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் (04.10.2019) 04 – ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>04.10.2019</td><td>பொருள் – 1<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரி TAX 2402-க்கு தகுதிச்சான்று பெற மராமத்து செய்யும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ள உண்டாகும் தோராய செலவினம் ரூ.65,000/- செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு<br>1. அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.</td><td>தீர்மான எண்.617 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>04.10.2019</td><td>பொருள் – 2<br>இந்நகராட்சி குடிநீர் பிரிவு லாரி TN45L7650-க்கு ஏற்பட்டுள்ள பழுதுகளை மராமத்து செய்ய மன்ற அனுமதி பெறப்பட்டதன் பேரில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்காணும் இரு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளன.
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளி வழங்கிய நிறுவனத்தின் பெயர்</th><th>ஒப்பந்த தெகை (ரூ)</th></tr>
<tr><td>1.</td><td>ஆண்டவர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் , பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை.</td><td>66000/-</td></tr>
<tr><td>2.</td><td>அன்னை பாத்திமா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை</td><td>68000/-</td></tr>
</table>
மேற்காணும் இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஆண்டவர்</td><td>தீர்மான எண்.618 அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் , மணப்பாறை நிறுவன ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>அனுமதிக்கலாம்<br>(948/2012/இ1) | |
| 04.10.2019 | **பொருள் – 3**<br>இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN45BZ7050-க்கு டயர்கள் 4 எண்ணம் புதியதாக விலைப்புள்ளி பெற்று மாற்றிடவும் அதற்கான தோராய செலவினம் ரூ .30,000/- செலவினம் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1.அனுமதிக்கலாம்<br>2.செலவினத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்<br>(ந.க.எண்.2305/2019/H1) | **தீர்மான எண்.619 அனுமதிக்கப்பட்டது.** |
| 04.10.2019 | **பொருள் – 4**<br>இந்நகராட்சியில் உள்ள 2877 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளி தொடர்பான முறை கேடுகள் நடைபெற்றுள்ளதாக வரப்பெற்ற புகார்களின் அடிப்படையில் ஆணையரால் ஆய்வு செய்யப்பட்டதில் கீழ்கண்டவாறு மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளி தொடர்பான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br>2877 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கும் திட்டத்திற்கு ரூ.100.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 13277/2018/WS1 நாள் 19.06.2018 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரம், சென்னை அவர்களின், செயல்முறை உத்திரவு ந.க.எண்.13277/2018/DO2 நாள் 07.12.2018, தொழில்நுட்ப அனுமதி எண் 665/2018-19 ன்படி தொழில்நுட்ப அனுமதியளிக்கப்பட்டுள்ளது.<br>மேற்கண்ட பணிக்கு 23.01.2019 ல் முதல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளதில் ஒப்பந்தப்புள்ளியில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரம் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் வெளியிடப்பட்டுள்ளது. மறு ஒப்பந்தப்புள்ளி 13.02.2019 ம் தேதி கோரப்பட்டுள¦ளது. குறிப்பு கோப்பில் நிர்வாக நலன் கருதி 21.02.2019. தேதிக்கு ஒத்தி வைப்பதாக குறிப்பிடப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விளம்பரம் மற்றும் செய்தி வெளியிடப்பட்டடாக ஆவணம் இல்லை. 21.02.2019 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது. | **தீர்மான எண்.620 அனுமதிக்கப்பட்டது.** |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. எ.அருள்சௌந்தரராஜ் | மதிப்பிட்டை விட 4.96 சதவீதம் அதிகம் |
| 2 | திரு. எஸ். சண்முகம் | மதிப்பிட்டை விட 11.61 சதவீதம் அதிகம் |

திரு.எஅருள்சௌந்தரராஜ், ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்தினை குறைத்துக்கொடுக்க கோரப்பட்டதில் 4.75 சதவீதம் மதிப்பீட்டு தொகையினைவிட கூடுதலாக குறைத்து கொடுத்துள்ளதாக தெரிவித்து இந்நகர்மன்ற தீர்மான எண் 536 நாள் 28.02.2019-ன்படி திரு.எஅருள்சௌந்தரராஜ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுகொள்ளப்பட்டு 28.02.2019 ல் ஒப்பந்தப்புள்ளி ஏற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்து பணியினை துவக்க ஒப்பந்ததாரர்க்கு கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளி இரண்டு உறை முறையில் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மற்றும் விலை குறிப்பிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி என பெறப்பட வேண்டும். மேலும் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு ஒப்பந்ததார்களின் தகுதியினை ஆய்வு செய்து அதன்அடிப்படையில் விலைப்புள்ளிக்கான ஒப்பந்தப்புள்ளியினை திறக்கப்படவேண்டும் ஆனால் இச்செயல்முறையினை கடைபிடிக்காமல் நேரடியாக விலைப்புள்ளி ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டுள்ளது. .அதனால் ஒப்பந்ததார்களின் தகுதி தொடர்பான விபரங்கள் அறிய இயலாமல் உள்ளதால் பணிக்கான ஒப்பந்தப்புள்ளிக்கு அங்கரிக்கப்பட்ட தொழில் நுட்ப ஒப்பந்தப்புள்ளி படித்தில் தொழில் நுட்ப தகுதி தொடர்பான தகுதியினை சரிபார்க்க உரிய படிவத்தில் தயார் செய்யப்பட்டுள்ளதில் கீழ்கண்டவாறு கோப்பின்படி தற்போது உள்ளது.

| Sl.No | Compliance criteria as per clause | Details | திரு. எ.அருள்சௌந்தரராஜ் | திரு. எஸ். சண்முகம் |
|---|---|---|---|---|
| 1 | 15.<br><br>15.1 | **Earnest Money Deposit**<br>Whether Earnest Money Deposit at 1% of the contract value of work put to tender in the form of Banker’s cheque, Demand Draft enclosed? (EMD in any other form will not be accepted) | 25.02.2019ம் தேதிய ஆக்ஸிஸ் வங்கியின் வரைவோலையினை இணைக்கப்பட்டுள்ளது. | விபரங்கள் இல்லை |
| 2 | 4.1.A.1 | Whether copy of Certificate of | விபரங்கள் | விபரங்கள் |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | registration as class I contractor and above, with proof for its currency enclosed? | இணைக்கப்பட வில்லை. ( இந்நகராட்சியில் 5ம் நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய்துதுள்ளார்.) திரு.என்.பிரபாகரன், ஒப்பந்தததாரர் என்பவரிடமிருந்து துணை ஒப்பந்ததாரராக பணிபுரிந்துள்ளதாக தெரிவித்து கடிதம் இணைக்கப்ப.டுள்ளது, | இணைக்கப்பட வில்லை., ( இந்நகராட்சியில் முதல்நிலை ஒப்பந்ததாரராக பதிவு செய் துள்ளார்) | | |
| | | 3 | 4.1.A.2 | Whether Proof for being in the Civil Engineering construction field at-least for the past Five year (2013-14 to 2017-2018) enclosed?[Bidder should submit the audited balance sheet for the last five years.] | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | 4 | 4.1.A.3 | Whether Proof for having an annual minimum financial turnover of not less than 50% of the value put to tender in a financial year in the preceding “Three” years (2015-16,16-17, 17-18) enclosed? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | 5 | 4.1.A.4 | Whether proof for having satisfactory completed BT or BT and CC Road Works of not less than 50% of the value put to tender under a **“single agreement”** in any one of the preceding three years (2015-16,16-17,17-18) for Government Department/Board/Government Undertaking enclosed? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | 6 | 4.1.A.5 | Whether Proof of the applicant for having working capital sufficient to finance at least 15% of value put to tender enclosed?<br>[ Working capital will be calculated by adding the amount available in the | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | bank account of the applicant on the date of submission of application and the unutilized amount of overdraft / credit facility extended to the applicant by the Nationalized / Scheduled banks] | | | | |
| | | 7 | 4.1.B | Whether all the certificates are Notarized? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | 8 | 4.1.C & D | Whether the proof/details of availability of Contractor's Major Equipments proposed for carrying out the works enclosed?<br>[If the contractor for BT road works does not own Paver Machine and Hot mix plant, lease agreement as prescribed in tender document enclosed] | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | 9 | General | Whether the latest TIN return enclosed ? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | 10 | Section 2 | Whether Annexure A to H have been enclosed duly filled in? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | 11 | General | Whether Power of attorney / Authorization for | | | | |
| | | | | •Persons signing the Tender enclosed? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |
| | | | | •For Partner – in- charge if any, enclosed? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 12 | SECTION 2 | Whether Qualification Information are annexed in the prescribed forms A to H ?<br>Annexure A<br>Annexure B<br>Annexure C<br>Annexure D<br>Annexure E<br>Annexure F<br>Annexure G<br>Annexure H | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. |
| 13 | | Whether the bidder has signed in all the pages of the tender document? | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. |
| 14 | D. 18.1 and 18.2 | Sealing and Marking of Bids in case of manual submission<br>a. Whether the cover containing EMD, VAT clearance certificate, qualification and information etc., has been super scribed as "Technical Bid"?<br>b. Whether the other cover containing the duly filled in tender schedule is super scribed as "Price Bid"?<br>c. Whether the bids are put in 2 separate covers and outer cover is sealed?<br>d. Whether both these covers are put in a single big envelope and bear the following identification: | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. | விபரங்கள் இணைக்கப்பட வில்லை. |

மேற்கண்டவாறு கோப்பில் உள்ள ஆவணக்களின்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப ரீதியாக ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. ஆனால் திரு. அருள்சௌந்தரராஜன், ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணிஉத்திரவு வழங்கி 202 குடிநீர் குழாய் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | தகுதியற்ற ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பணியினை மேற்கொள்வது ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளுக்கு முரணாக உள்ளது. இந்நிலையில் மேற்கண்ட பணியினை தொடர்ந்து மேற்கொள்வது குற்றச்சாட்டுகளுக்கு இடமளிக்கும் வகையிலும் சட்டத்திற்கு புறம்பான செயல் என்பதாலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது என்பது தெரியவருகிறது. எனவே கோப்பு மற்றும் ஆவணங்களின் அடிப்படையில் நிர்வாக நலன் கருதி மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியினை இரத்துசெய்யவும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளுக்கு முரணாக உள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுகொள்ளப்பட்ட மற்றும், 202 குடிநீர் குழாய் இணைப்புகளும் வழங்பட்டுள்ளதில் பணிமேற்கொண்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதில், மேற்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதனால் இழப்பீடு ஏற்ப்பட்டால் சம்மந்தப்பட்ட அலுவலர்களை பொறுப்பாக்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு -__ அனுமதிக்கலாம் | |
| 04.10.2019 | **பொருள் – 5**<br>வட்டாட்சியர், மணப்பாறை நகராட்சி அவர்களின் கடிதம் ந.க.ஆ1/3894/2019 நாள்.17.10.2019-ல் மணப்பாறை வட்டம், செவலூர் கிராமம், T.S.No.19/1 பழைய புல எண்.659/1ல் மொத்த விஸ்தீரணம் 0.0917.0 ஏர்ஸ் நிலமும், T.S.No.19/10 பழைய புல எண்.659/10-ல் மொத்த விஸ்தீரணம் 0.0109.0 தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு நிலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்ய உரிய முன்மொழிவுகள் அனுப்ப நகர்மன்றத்தின் அனுமதி கோரப்பட்டுள்ளது.<br>அதன்படி, மணப்பாறை வட்டம், செவலூர் கிராமம், T.S.No.19/1 பழைய புல எண்.659/1ல் மொத்த விஸ்தீரணம் 0.0917.0 ஏர்ஸ் நிலமும், T.S.No.19/10 பழைய புல எண்.659/10-ல் மொத்த விஸ்தீரணம் 0.0109.0 தீர்வை ஏற்பட்ட புஞ்சை தரிசு நிலம் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க நிலம் ஒதுக்கீடு செய்ய தடையின்மை சான்று வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு__<br>அனுமதிக்கலாம் (ந.க.எண்.2303/2019/எப்1) | **தீர்மான எண்.621 அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**